இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 20-05-2023

# விஷச் சாராயமும் விஷம அரசியலும் 2

கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் கள்ளச்சாராய வியாபாரிகள் மீது எந்த நடவடிக்கையும் இல்லை என்கிறார் பழனிசாமி. கடந்த 2022 ஆம் ஆண்டு மட்டும் ஒரு லட்சத்து 40 ஆயிரத்து 649 சாராய வழக்குகள் பதிவாகி உள்ளன. 1 லட்சத்து 39 ஆயிரத்து 697 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இவர்கள் பயன்படுத்திய 2 ஆயிரத்து 957 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆண்டில் இதுவரையில் 55 ஆயிரத்து 173 பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இதில் 4 ஆயிரத்து 534 பேர் பெண்கள். 79 பேர் மீது குண்டர் தடுப்புச் சட்டம் பாய்ந்துள்ளது. இது எதையும் தெரிந்துகொள்ளாமல் பொறுப்பற்றுப் பேசி இருக்கிறார் பழனிசாமி.

பழனிசாமி எந்தளவுக்கு இரக்கமற்றுப் போய்விட்டார் என்பதற்கு உதாரணம்...பார்வைபாதிக்கப்பட்டவர்களைகிண்டல்செய்திருக்கிறார். 'கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் எதற்கு என்று பழமொழி சொல்வார்களாம். அதுபோல இன்றைக்கு கள்ளச்சாராயம், போலி மதுபானம் குடித்தவர்கள் கண்ணையும் இழந்துவிட்டார்கள்' என்று சொல்லி இருக்கிறார் பழனிசாமி. இந்த உதாரணத்துக்கும் மக்கள் அடைந்த பாதிப்புக்கும் என்ன சம்பந்தம்? குடிக்கப் போய் பார்வையை இழந்துவிட்டு எதற்காக மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வருகிறீர்கள் என்கிறாரா?

**ஜெயலலிதா ஆட்சியில் 2001ஆம் ஆண்டு கடலூர் மாவட்டம் பண்ருட்டியில் கள்ளச்சாராயத்துக்கு 52 பேர் பலியானார்கள். 30 பேரின் பார்வை பறிபோனது. இப்போது பேசுவது எல்லாம் ஜெயலலிதாவுக்கும் பொருந்துமா?**

**தூத்துக்குடியில் அமைதியாக ஊர்வலம் சென்றவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியவர் எடப்பாடி பழனிசாமி. இதனை நீதிபதி அருணா ஜெகதீசன் ஆணையம் உறுதி செய்துள்ளது.**

"தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம் பற்றி அப்போதைய முதல் அமைச்சர் எடப்பாடி பழனிசாமி, 'அந்தச் சம்பவத்தை மற்றவர்களைப் போல ஊடகங்களில் வந்த செய்தி மூலம் அறிந்து கொண்டேன்' என்று பத்திரிகையாளர்களுக்குப் பேட்டி அளித்தார். ஆனால் இந்த ஆணையத்திடம் மிக வலுவாக இருக்கும் ஆதாரம் என்னவென்றால், சாட்சியாக விசாரிக்கப்பட்ட அப்போதைய தலைமைச் செயலாளர் கிரிஜா வைத்தியநாதன், அப்போதைய டி.ஜி.பி. ராஜேந்திரன், அப்போதைய உளவுத்துறை ஐ.ஜி. சத்தியமூர்த்தி ஆகியோர் **தூத்துக்குடியில் நடக்கும் சம்பவங்களையும், அங்குள்ள நிலவரங்களையும் நிமிடத்துக்கு நிமிடம் எடப்பாடி பழனிசாமியிடம் தெரிவித்து வந்ததாகக் கூறினார்கள். எனவே, ஊடகங்கள் மூலமாகத்தான் அந்தச் சம்பவம் பற்றித் தெரிந்து கொண்டதாக எடப்பாடி பழனிசாமி கூறியது தவறான கருத்து என்பது இந்த ஆணையத்தின் கருத்தாகும்"** என்று ஆணையத்தின் அறிக்கை சொல்கிறது. 13 பேர் படுகொலைக்கு பொறுப்பேற்க வேண்டியது பழனிசாமி அல்லவா?

**பொள்ளாச்சியில் பெண்களை மிரட்டி ஆபாசப்படம் எடுத்தவர்கள் தைரியமாக அ.தி.மு.க. ஆட்சியில் வலம் வந்தார்கள். புகார் கொடுத்தவர்களை மிரட்டினார் அ.தி.மு.க. பிரமுகர். அவர் கோவை எஸ்.பி.அலுவலக வாசலில் வைத்து தைரியமாக பேட்டி கொடுத்தார். தி.மு.க. மகளிரணி சார்பில் போராட்டம் நடத்திய பிறகுதான் நடவடிக்கை எடுப்பதைப் போல நாடகம் ஆடினார்கள். ஆனால் சாட்சிகளை மிரட்டுவதை வேடிக்கை பார்த்தார்கள். பிடித்துத் தரப்பட்ட குற்றவாளிகளை விடுவித்தது அ.தி.மு.க. ஆட்சி. அ.தி.மு.க. பிரமுகரைச் சந்தித்து கோரிக்கை வைத்த பிறகும் செயல்படவில்லை. தரப்பட்ட ஆபாச வீடியோக்களை வைத்து நடவடிக்கை எடுக்கவில்லை. இது பற்றி பத்திரிகையாளர்கள் அன்றைய முதலமைச்சர் பழனிசாமியைக் கேட்டார்கள். "அப்படியெதுவும் இல்லை, ஆதாரம் இருந்தால் கொடுங்கள்" என்றார்.**

**பாதிக்கப்பட்ட பெண்ணின் அடையாளம் தெரியக்கூடாது என்று உச்சநீதிமன்றம் உத்தரவு போட்டிருக்கும் நிலையில் அந்தப் பெண்ணின் பெயரையும் முகவரியையும் வெளிப்படையாக அறிவித்த அக்கறையற்ற ஆட்சிதான் பழனிசாமியின் ஆட்சி.**

பெண்களை வசியப்படுத்த 'பெய்டு கேங்' என்ற ஒரு கும்பல் பொள்ளாச்சியில் செயல்பட்டதாக ஊடகங்களில் செய்தி வெளியானது. இதுதான் பழனிசாமியின் காலம்.

தேசிய குற்றப் பதிவேடு ஆவணக் காப்பகம் (என்.சி.ஆர்.பி.) வெளியிட்ட அறிக்கையின்படி, இந்தியாவில் கொலைகள் அதிகம் நடக்கும் மாநிலங்களின் பட்டியலில் 6 ஆவது இடத்தை எட்டியது தான் எடப்பாடி ஆட்சிக் காலம் ஆகும்.

கொலைகள் அதிகம் நடந்த மாநகரங்களில் நான்காவது இடத்தை சென்னை பெற்றது எடப்பாடி ஆட்சிக் காலம்.

**இந்திய தண்டனைச் சட்டப்படியான குற்றங்களில் 6 ஆவது இடத்தில் தமிழ்நாட்டை கொண்டுபோய் நிறுத்தியவர் பழனிசாமி.**

**பொதுமக்கள் மீது சட்டவிரோதமாகக் கூடியதாக அதிகம் வழக்குப் போட்டதில் 4 ஆவது மாநிலமாக தமிழ்நாட்டை ஆக்கியவர் பழனிசாமி.**

**பட்டியல் மற்றும் பழங்குடியினர் கொலை அதிகம் நடக்கும் மாநிலப் பட்டியலில் 4 ஆவது இடத்தில் தமிழ்நாட்டை ஆக்கியவர் பழனிசாமி.**

**பெண் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்முறையில் 8 இடத்தில் தமிழ்நாட்டை நிறுத்தியவர் பழனிசாமி.**

**தற்கொலைகள் அதிகம் நடக்கும் மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாட்டை 2 ஆவது இடத்தில் நிறுத்தியது பழனிசாமி ஆட்சிக்காலம்.**

இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். எனவே விஷம அரசியலை பழனிசாமி நிறுத்திக் கொள்ளட்டும். வளர்மதியோடு சேர்ந்து மண்சோறு சாப்பிடலாம்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.5.2023) தலைமைச் செயலகத்தில், காவல் துறை சார்பில் செங்கல்பட்டு, இராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் ஆகிய இடங்களில் 36 கோடியே 39 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மூன்று மாவட்ட காவல் அலுவலகக் கட்டடங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, உள்துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, காவல்துறை தலைமை இயக்குநர் முனைவர் செ. சைலேந்திர பாபு, தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் முனைவர் அ.கா. விசுவநாதன், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தின் தலைவர் / காவல்துறை இயக்குநர் திருமதி சீமா அகர்வால் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.05.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மின்தொடரமைப்பு கழகம் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் சார்பில், 1859 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள 16 புதிய துணை மின் நிலையங்களையும்,143 கோடியே 88 இலட்சம் ரூபாய் செலவில் 65 துணை மின் நிலையங்களில் 853 எம்.வி.ஏ அளவிற்கு திறன் மேம்படுத்தப்பட்ட 67 மின் மாற்றிகளின் செயல்பாட்டினையும் தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, எரிசக்தித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ரமேஷ்சந்த் மீனா, தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகத்தின் தலைவர் / தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ரூ.36.39 கோடி மதிப்பில் கட்டப்பட்ட - செங்கல்பட்டு, இராணிப்பேட்டை, திருப்பத்தூர்

# மாவட்ட காவல் அலுவலகக் கட்டடங்கள்! முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

## 3271 பேருக்கு - இரண்டாம் நிலை காவலர் பணியிட பணி நியமன ஆணைகள் வழங்கினார்!

சென்னை, மே 20 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (19.5.2023) தலைமைச் செயலகத்தில், காவல் துறை சார்பில் செங்கல்பட்டு, இராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் ஆகிய இடங்களில் 36 கோடியே 39 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மூன்று மாவட்ட காவல் அலுவலகக் கட்டடங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

மேலும், 3271 இரண்டாம் நிலை காவலர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

அதன் விவரம் வருமாறு:--

காவல்துறை என்பது, குற்றங்களைத் தடுக்கும் துறையாகவும், தண்டனை பெற்றுத்தரும் துறையாகவும் மட்டும் அல்லாமல், குற்றங்கள் நடக்காத சூழ்நிலையை உருவாக்கும் துறையாகச் செயல்பட வேண்டும் என்ற முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி மாநிலத்தின், அமைதியைப் பேணிப் பாதுகாத்து, சட்டம் ஒழுங்கைப் பராமரிக்கும் முக்கியப் பணிகளை ஆற்றி வரும் காவல் துறையின் பணிகள் சிறக்க, புதிய காவல் நிலையங்கள் மற்றும் காவலர் குடியிருப்புகளை கட்டுதல், ரோந்து வாகனங்களை கொள்முதல் செய்தல், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், செங்கல்பட்டு மாவட்டம் – செங்கல்பட்டில் 12 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவிலும், இராணிப்பேட்டை மாவட்டம் – இராணிப்பேட்டையில் 12 கோடியே 3 இலட்சம் ரூபாய் செலவிலும், திருப்பத்தூர் மாவட்டம் – திருப்பத்தூரில் 12 கோடியே 11 இலட்சம் ரூபாய் செலவிலும், என மொத்தம், 36 கோடியே 39 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மூன்று மாவட்ட காவல் அலுவலகக் கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

இம்மாவட்ட காவல் அலுவலகக் கட்டடங்கள் தரை மற்றும் மூன்று தளங்களுடன் சுமார் 4245 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டடத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அறை, மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அறைகள், கட்டுப்பாட்டு அறை, பொதுமக்கள் காத்திருப்பு அறை, உணவருந்தும் கூடம், அலுவலக அறைகள், ரேடியோ ஸ்டேஷன், கூட்டரங்கம், கைரேகை பிரிவு. சைபர் லேப், சிசிடிவி கேமராக்கள், மின்தூக்கி, மின்னாக்கி, தீயணைப்பு கருவிகள் போன்ற வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தின் வாயிலாக இரண்டாம் நிலை காவலர் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 2617 ஆண்கள் மற்றும் 654 பெண்கள், என மொத்தம் 3271 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்றையதினம் 10 நபர்களுக்கு இரண்டாம் நிலை காவலர் பணியிடத்திற்கான பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

தேர்வு செய்யப்பட்ட இரண்டாம் நிலை காவலர்களுக்கு திருவள்ளூர், வேலூர், விழுப்புரம், திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர், மதுரை மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் உள்ள நிரந்தர காவலர் பயிற்சி பள்ளிகளில் 1.6.2023 முதல் பயிற்சி வகுப்புகள் தொடங்கப்படவுள்ளன.

இந்த நிகழ்ச்சியில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, உள்துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, காவல் துறை தலைமை இயக்குநர் முனைவர் செ. சைலேந்திர பாபு, தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் முனைவர் அ.கா. விசுவநாதன், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தின் தலைவர் / காவல்துறை இயக்குநர் திருமதி சீமா அக்ரவால் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மேலும், காணொலிக் காட்சி வாயிலாக செங்கல்பட்டிலிருந்து குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ. அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் ஜி. செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.எஸ். பாலாஜி, எம். பாபு, திருமதி வரலட்சுமி மதுசூதனன், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர. ராகுல் நாத், காஞ்சிபுரம் சரக காவல் துணைத் தலைவர் பி. பகலவன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் (பொறுப்பு) டாக்டர் எம். சுதாகர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், இராணிப்பேட்டையிலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எஸ். வளர்மதி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் செல்வி டி.வி. கிரண் ஸ்ருதி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், திருப்பத்தூரிலிருந்து சட்டமன்ற உறுப்பினர்கள் அ.நல்லதம்பி, க.தேவராஜீ, அ.செ. வில்வநாதன், மாவட்ட ஆட்சித் தலைவர் தெ. பாஸ்கர பாண்டியன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் கி. பாலகிருஷ்ணன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி

# வேலூர் மாநகரில் 100 நாட்களுக்கு மதிய உணவு!

## மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

வேலூர், மே 20 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நாளை சிறப்பாகக் கொண்டாடும் வகையில் வேலூரில் 100 இடங்களில் கழகக் கொடி ஏற்றுவதுடன் தொடர்ந்து 100 நாட்களுக்கு மதிய உணவு வழங்கப்படும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

வேலூர் மாநகர தி.மு.க.விற்கு உட்பட்ட வேலூர் சட்டமன்றத் தொகுதி பகுதி வட்டக் கழக நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் பேபி திருமண மஹாலில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாநகர அவைத்தலைவர் சூரி என்ற கோவிந்தன் தலைமை தாங்கினார். மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமது சகி, மாநகர தி.மு.க. செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநில சிறுபான்மை பிரிவு துணைச் செயலாளர் ஒசூர் விஜயகுமார் சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சி யில் மாநகர, பகுதி, கழக வட்டக் கழக நிர்வாகிகள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு புதிதாக ஒரு கோடி உறுப்பினர்களை சேர்த்திட வேண்டுமென கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் அறிவிப்பிற்கு இணங்க ஒவ்வொரு வட்டக் கழகத்திற்கும் உறுப்பினர் படிவங்கள் பகுதி கழக செயலாளர்கள் மூலமாக கொடுக்கப்பட்டுள்ளது .இதில் தொகுதி ஒன்றிற்கு 50 ஆயிரம் உறுப்பினர்கள் சேர்த்திட வேண்டுமென அறிவுறுத்தி இருந்தார். இதில் ஒரு சில வார்டுகளை தவிர மற்ற வார்டுகளின் வட்டக் கழக செயலாளர்கள் ஓரளவே பூர்த்தி செய்து கொடுத்துள்ளனர் .எனவே ஒவ்வொரு வட்டக்கழக செயலாளரும் இப்பணியினைத் துரிதப்படுத்தி ஓரிரு நாட்களில் மாநகரக் கழக செயலாளரிடம் ஒப்படைத்திட வேண்டும் என கூட்டம் வாயிலாக கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இந்திய அரசியலில் முதுபெரும் தலைவராகத் திகழ்ந்து, பல ஜனாதிபதிகளையும் ,பல இந்திய பிரதமர்களையும் அடையாளம் காட்டி நம் தாய் தமிழ்நாட்டில் ஐந்து முறை முதல்வராக பணியாற்றி தமிழ்நாடு எங்கும் பல்வேறு கட்டமைப்புகளை உருவாக்கியும் பல்வேறு நலத்திட்டங்களைத் தீட்டிய உத்தமத் தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூறாவது பிறந்தநாள் வரும் ஜூன் 3ஆம் தேதி தமிழ்நாடு முழுவதும் கொண்டாடப்பட உள்ளது.

எனவே அன்றைய தினம் வேலூர் மாநகரக் கழக அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவச் சிலைக்கும் அண்ணாவின் தம்பியாக வாழ்ந்து மறைந்த நம் தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவச் சிலைக்கும் மாலை அணிவித்து மரியாதை செய்யப்படுகிறது. அதை தொடர்ந்து நூறாவது நாள் பிறந்த நாளை குறிக்கும் வகையில் தொடர்ந்து 100 நாட்களுக்கும் மாநகர தி.மு.க. அலுவலக வளாகத்தில் மதிய உணவு பொதுமக்களுக்கு வழங்கப்படும்.

மேலும் வேலூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட வட்ட கழகங்களில் 100 இருவண்ண கொடியேற்றி சிறப்பான முறையில் நடைபெற மாநகரக் கழகம் உறுதுணையாக இருந்து கொண்டாடப்படும் என கூட்டம் தீர்மானிக்கிறது.